# சகல சத்தியத்துக்குள் நடத்துங்கள்

பரிசுத்த ஆவியானவர் வந்து பாவத்தை குறித்தும் நீதியை குறித்தும் நியாய தீர்ப்பை குறித்தும் கண்டித்து உணர்த்துவார். பரிசுத்த ஆவியானவர் வந்து சகல சத்தியத்துக்குள் உங்களை நடத்துவார் என்று இயேசு கிறிஸ்து சொன்னார்.இன்றைக்கு சபைகளில் பரிசுத்த ஆவியானவர் ஜனங்களின் பாவங்களை விட்டு விடும் படியாக எச்சரித்து பேசும் படி ஏவுகிறார். ஆனால் ஊழியக்காரர்களோ அதற்க்கு செவி கொடுப்பதில்லை. ஒரு வேளை பாவங்களை குறித்து கடிந்து கொண்டு பேசினால் சபைகளில் ஜனங்களின் எண்ணிக்கையை இழக்க நேரிடும். மேலும் சபையின் மூலமாக வரும் வாழ்வாதாரங்களை இழ்க்க நேரிடலாம் அதே மாதிரி விசுவாசிகளும் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமல் செவி தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைக்கேற்ற உபதேசங்களையே விரும்புகிறார்கள் ( 2 தீமோத்தேயு 4). இது மிகவும் அபாயக்கரமாகும். இவர்கள் பரிசுத்த ஆவியானவரையே அசட்டை பண்ணுகிறார்கள் (1 தெசலோனிக்கேயர் 4:8).

நீதிமொழிகள் 1:30 என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை என் கடிந்துகொள்ளுதலையெல்லாம் அசட்டைபண்ணினார்கள்.

இன்றைக்கு பல சபைகளில் மது குடிப்பது ஒரு பாவமாகவே கருதப்படவில்லை. விபச்சாரம் செய்வதும், திருடுவதும், பொய் சொல்வதும், லஞ்சம் வாங்குவதும் பாவமாக அங்கிகரிக்கப்படுவதில்லை. மேலும் இவைகளை செய்கிறவர்கள் மூப்பர் ஸ்தானத்தில் அமர்ந்திருப்பது தான் வேதனையான விஷயம். ஒரு வேளை அந்த சபையின் போதகர் பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்படிந்து இத்தகய பாவங்களை குறித்து எச்சரிப்பார் என்றால் இவர் தனது பதவியையும் சலுகைகளையும் இழக்க நேரிடும். இவர்கள் ஆத்தும ஆதாயத்துக்காக அல்ல தங்கள் சொந்த ஆதாயத்துக்காகவே ஊழியம் செய்கிறார்கள். பல சபைகளில் கூட ஊழியக்காரர்கள் தங்கள் ஜனங்களை வேத வசனத்திற்க்கு கீழ்படிவதை விட மனிதன் உருவாக்கிய சபையின் சட்டங்களுக்கே கீழ்படிய வைக்கிறார்கள். இவர்கள் தேவ ராஜ்யத்தை கட்டாமல் சபையை விஸ்தாரப்படுத்துகிறார்கள். தேவனை மகிமை படுத்துவதை விட தங்கள் சபையை மேன்மை படுத்துகிறார்கள். இவர்கள் தேவனை விட தங்கள் ஸ்தாபனங்களை மிகவும் நேசிக்கிறார்கள். இத்தகய சுய இச்சைக்கேற்ற போதகர்கள் தேவனுடைய பார்வையில் குருடருக்கு வழிக்காட்டும் குருடர்களே. ஏனென்றால் இவர்கள் தங்கள் மந்தைகளை நரகத்துக்கு நேராக நடத்துகிறார்கள். மத்தேயு 23.15ன் படி இயேசு சொன்னது போல இவர்களை தங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மக்களாக்குகிறார்கள்.

எசேக்கியேல் 3:18-21
சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்கு சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கனான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்கு சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்த துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்.
நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தான் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற் போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்
அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிகேடு செய்யும்போதும், நான் அவன்முன் இடறலைவைக்கும்போதும், அவன் சாவான்; நீ அவனை எச்சரிக்காதபடியினாலே அவன் தன் பாவத்திலே சாவான்; அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை; அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்.
நீதிமான் பாவஞ்செய்யாதபடிக்கு நீ நீதிமானை எச்சரித்தபின்பு அவன் பாவஞ்செய்யாவிட்டால், அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் எச்சரிக்கப்பட்டான்; நீயும் உன் ஆத்துமாவைத் தப்புவித்தாய் என்றார்.

2தீமோத்தேயு 4:2
சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு: எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.

தீத்து 2:15
இவைகளை நீ பேசி, போதித்து , சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக.

நீதிமொழிகள் 1:23 என் கடிந்துகொள்ளுதலுக்குத் திரும்புங்கள் இதோ என் ஆவியை உங்களுக்கு அருளுவேன் என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் சாத்தான் ரஜ்யங்களின் மகிமையை காட்டி என்னை பணிந்து கொள் இவையெல்லாவற்றையும் உனக்கு தருகிறேன் என்று சொன்ன போது நான் என் பிதா ஒருவருக்கே செவிக்கொடுப்பேன் அவர் சித்தம் மாத்திரமே செய்வேன் என்று சொல்லி பிசாசை விரட்டினார். ஆனால் இன்று அநேக ஊழியக்காரர்களை பிசாசானவன் உலக ஆசை இச்சைகளை காட்டி தேவ சித்தம் செய்யாதபடிக்கு அவர்களை அடிமைதனத்துக்குள் வைத்திருக்கிறான். இவர்கள் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுவதற்கு பதிலாக உலக ராஜ்யத்தையே தேடும்படி சாத்தான் இவர்களை ஆளுகை செய்கிறான். இவர்கள் ஜனங்களையும் அதே வழியிலே நடத்த விருப்புகிறார்கள். இவர்கள் தேவனுக்கு பயப்படுகிறார்களோ இல்லையோ தங்கள் சபை மூப்பர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கு அஞ்சி நடுங்குகிறார்கள்.
அதிக ஆக்கினையை அடைவோம் என்று உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக என்ற (யாக்கோபு 3:1) ன் எச்சரிப்பை இவர்கள் கண்டு கொள்வதில்லை. நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாக இருக்கிறது 1தெசலொனிக்கேயர் 4:3.
எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறியும் அறிவை அடையவும் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 1 தீமோத்தேயு 2. எனவே ஜனங்கள் இரட்சிக்கப்பதபடிக்கு சத்தியத்தின் படி நடக்க கூடாதபடி சத்தியத்தை சரியாக போதிக்காமல் பாவத்தை கண்டித்து உணர்த்தாமல் தானும் இடறலாயிருந்து ஜனங்களையும் இடற செய்கிற ஊழியக்காரர்களுடைய வாழ்க்கையில் பயங்கரமான சாபங்கள் அனுமதிக்கப்படுகிறது.

இடறல் உண்டாக்குகிறவன் கழுத்தில் எந்திரகல்லை கட்டி சமுத்திரத்தில் அவனை தள்ளிப்போடுவது அவனுக்கு நலமாயிருக்கும் (மாற்கு 9:42) என்று இயேசு கிறிஸ்து சொன்னார்.
தேவ சித்தத்தின் படி ஊழியம் செய்யாத ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எச்சரித்தார்.

லூக்கா 12:47 தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்ததின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்.

மேலும் என் சித்தத்தின் படி ஊழியம் செய்யாதவன் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை என்று (மத்தேயு 7:21) எச்சரித்தார்.
மோசேயை குறித்து தேவன் அவன் என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்

என்றார். நான் அவனுடன்முகமுகமாக பேசுகிறேன் என்றார் (எண்ணாகமம் 12:7). நாத்தான்வேலை பார்த்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்.இன்றைக்கு ஆண்டவர் உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே, ஊழியத்தில் என் சித்தத்தையும் திட்டத்தையும் செய்தாய் என் நாமத்தை மகிமைபடுத்தினாய் என்று உங்களில் எத்தனை பேரை குறித்து சாட்சி சொல்ல முடியும்.நீதியை குறித்தும், நியாயத்தீர்ப்பை குறித்தும், பாவத்தை குறித்தும் ஜனங்களை கண்டித்து உணர்த்தி பிரசங்கித்தாய் என்று உங்களை குறித்து தேவன் சாட்சி கொடுக்க முடியுமா? நீங்கள் ஒரு பெரிய சபையின் போதகராக இருக்கலாம்? பல விதமான ஊழியங்களை செய்து கொண்டிருக்கலாம் ஆனால் என் சித்தத்தை செய்தாயா என்று தான் சந்திப்பின் நாளிலே தேவன் உங்களை பார்த்து கேட்பார். இம்மைக்காக தேவ வசனங்களை புறக்கணித்து தேவன் செய்ய சொன்ன மற்றும் கட்டளையிட்ட காரியங்களை செய்யாவிட்டால் எல்லா மனுஷர்களை காட்டிலும் பரிதபிக்கபட்டவர்களாய் இருப்பீர்கள். நீங்கள் பல வருடங்களாக ஊழியம் செய்திருக்கலாம் ஆனால் தேவ சித்ததின் படி ஊழியம் செய்யாததினால் பரலோகராஜ்யம் உங்களை புறக்கணிக்கும். ஆனால் நேற்றைக்கு மனம் திரும்பி இரட்சிக்கப்பட்ட ஒருவன் பரலோகத்துக்கு பிரவேசித்து விடுவான். நீங்கள் செய்யும் ஊழியங்கள் மற்றும் உங்கள் உபதேசங்கள் குறித்து ஜாக்கிரதையாக இருங்கள். தேவ சித்தத்தை அறிந்து கொள்ள பரிசுத்த ஆவியானவருக்கு செவி கொடுங்கள். அவர் பாதத்தில் காத்திருந்து அவர் குரலை கேட்கும் படி அமர்ந்திருங்கள். தயவு செய்து உங்கள் வாழ்வாதாரத்துக்காகவோ, உலக ஆசை இச்சைகளுக்கோ உங்கள் பதவிக்காகவோ தேவனுடைய வார்த்தைகளை அவமாக்காதீர்கள். ஜனங்களுக்கு சத்தியத்தை போதித்து நித்திய ஜீவனுக்கு நேராக அவர்களை வழி நடத்துங்கள்.

**யாக்கோபு 3:1 என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்க்ளாக.**

Elshaddai gospel network